# அலகு - 5 எங்கள் இந்தியா



இமயம் முதல் குமரி வரை
எங்கள் இந்தியா!
சமயம் கடந்து மக்கள் வாழும்
எங்கள் இந்தியா!

காந்தி மகான் பிறந்த நாடு
எங்கள் இந்தியா!
சாந்தமுடன் மக்கள் வாழும்
எங்கள் இந்தியா!

பாடல் நின்றது. ஒலிபெருக்கியில் ஓர் அறிவிப்பு கேட்டது.




வாகனத்திலிருந்து வீசிய ‘நோட்டீஸ்’ ரகுவின் அருகே வந்து விழுந்தது. அவன் அதை எடுத்துப் படித்தான்.

‘ஹையா..! நமது பள்ளியிலிருந்துதான் பேரணி ஆரம்பமாகின்றது. நமக்கு நாளை கொண்டாட்டம்தான்!’

- இதுபோல் உங்கள் வட்டாரங்களில் கொண்டாடப்படும் விழாக்களின் பெயர்களை எழுதுங்கள்.
  - ஓணவிழா
  - பொங்கல் விழா
  - காந்திஜெயந்தி
  -
  -



பேரணியில் அணிந்து செல்வதற்கான பொருட்களை வாங்க, ரகுவும் அருணும் கடைக்குச் சென்றனர்.

## விலைப் பட்டியல்

| பொருள் | விலை (ரூபாய்) |
|---|---|
| தொப்பி | 24 |
| கொடி | 16 |
| ரிப்பன் (ஒரு முழம்) | 5 |
| கிரீடம் | 15 |
| வண்ணக் காகிதம் | 4 |



- ரகு 2 தொப்பியும் 5 முழம் ரிப்பனும் வாங்கினான்.

அவன் கடைக்காரருக்கு எத்தனை ரூபாய் கொடுக்க வேண்டும்? ☐

- ரகுவிடம் 5 ரூபாய் நாணயங்கள் பத்து, 2 ரூபாய் நாணயங்கள் ஐந்து, 1 ரூபாய் நாணயங்கள் பதின்மூன்றும் இருந்தன. பணம் போதுமானதாக இருந்ததா?.
- அருண் 5 வண்ணக் காகிதங்களும் 2 கொடியும் வாங்கினான்.
- அவன் 100 ரூபாய் கொடுத்தான், கடைக்காரர் மீதி எத்தனை ரூபாய் கொடுத்திருப்பார்? ☐
- அருணுக்குக் கடைக்காரர் மீதியாக 5 ரூபாய் நாணயங்கள் ஆறும், 2 ரூபாய் நாணயங்கள் ஆறும், சில ஒரு ரூபாய் நாணயங்களும் கொடுத்தார். என்றால் ஒரு ரூபாய் நாணயங்கள் எத்தனை?

# சுதந்திரதின விழா






ரகுவின் பள்ளியில் நடைபெற்ற சுதந்திரதின விழாவின் படத்தொகுப்பைப் பாருங்கள்.








- உங்கள் பள்ளியில் நடைபெற்ற ஒரு விழாவைப் பற்றிச் சொல்லுங்கள்.



சுதந்திரதின விழா சிறப்பாக நடை பெற்றது. விழாவின் முடிவில் அடுத்த விழாவின் பெயரை அறிவித்தார்கள் ‘காந்தி ஜெயந்தி’!... ரகுவிற்கு உற்சாகம் தாங்கமுடியவில்லை. அவன் நண்பர்களுடன் வகுப்பறைக்கு ஓடினான். சுவரில் தொங்கிக்கொண்டிருந்த நாட்காட்டியைப் புரட்டினான்.

காந்தி ஜெயந்தி தேதி அவன் கண்ணில் பட்டது. அதைக் குறித்து வைத்துக்கொண்டான்.

| **விழாக்கள்** | **மாதம்** | **தேதி** |
|---|---|---|
| சுதந்திரதின விழா | | |
| **Lôk§ ù_Vk§** | **A dúPôTo** | **2** |
| **ÏZkûRLs §]m** | | |
| **úLW[l©\® §]m** | | |
| **Ï¥VWÑ §]m** | | |




**நாட்காட்டியில் வேறு என்னென்ன?.**

இந்த வருட நாட்காட்டியிலிருந்து உங்கள் பிறந்தநாளைக் கண்டுபிடியுங்கள்.

தேதி............. கிழமை............................ மாதம்....................

# உதவிக்கு யார்?




பேரணி முடிந்தது. ரகு வீட்டிற்கு வந்தான். வீடு பூட்டிக்கிடந்தது. அவன் திகைத்துப் போனான். அப்போது பக்கத்து வீட்டு மாமி அவனை அன்போடு அழைத்தாள். “ரகு வாப்பா... மிகவும் களைப்பாக இருக்கிறாயே...! கை, கால், முகம் கழுவிவிட்டு வா. வந்து சாப்பிடு,” என்றாள்.

ரகு, மாமியின் வீட்டிற்குச் சென்றான். “மாமி! வீடு பூட்டியிருக்கிறதே...! அம்மாவும் அப்பாவும் எங்கே போயிருக்கிறார்கள்?” “உங்கள் அப்பா திடீரெனக் கீழே விழுந்துவிட்டார். உங்கள் அம்மா கடைக்குப் போயிருந்தார்.

நம் வசந்தி அக்காதான் தண்ணீரெல்லாம் கொடுத்து உதவினார்கள். எதிர்வீட்டுக் கரீம் ஐயாதான் ஆட்டோ கூட்டிக்கொண்டு வந்தார். எல்லாருமாக அரசு மருத்துவமனைக்குப் போயிருக்கிறார்கள். பயப்பட வேண்டாம் ரகு; சீக்கிரம் சாப்பிடு. நாமும் போவோம்,” என்றாள் மாமி.

- இதுபோன்று பக்கத்து வீட்டார் உங்களுக்கு உதவிய அனுபவம் உண்டா? கூறுங்கள்.
- நீங்கள் பிறருக்குச் செய்த உதவி பற்றியும் கூறுங்கள்

மாமியும் ரகுவும் மருத்துவமனைக்குச் சென்றார்கள்.



ரகு மருத்துவமனையில் என்னென்ன காட்சிகள் பார்த்திருப்பான்?

அனைவருக்கும் உதவும் பொது நிறுவனங்களின் பெயர்களை எழுதுங்கள்.

- மருத்துவமனை
- பள்ளிக்கூடம்
- ரேஷன் கடை
- 
- 
- 